SALCO
South Asian Legal Clinic of Ontario



# பிரிவினை ஒப்பந்தங்கள்

### பிரிவினை ஒப்பந்தம் (Separation Agreement) என்றால் என்ன?

தம்பதியர் தங்கள் திருமண உறவு தற்போது முடிந்துவிட்டதாகவும், அவர்கள் தனித்தனியாக வாழ விரும்புவதாகவும் முடிவு செய்தால், அவர்கள் பிரிந்ததாகக் கருதப்படுவார்கள். உண்மையில் பிரிந்து போவதைத் தவிர வேறு “சட்டப் பிரிப்புச் செயல்முறை” என்று எதுவும் நடைமுறையில் இல்லை.

பிரிந்து செல்லும் தம்பதியினர் திருமணமானவர்களாகவோ அல்லது பொதுச்சட்டப்படி கூடி வாழ்பவர்களாகவோ இருக்கலாம்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் தம்பதியினர் பிரிந்துவிட்டதாகக் கருதப்படலாம்:

### தீர்க்கப்பட வேண்டிய பொதுவான சிக்கல்கள்:

- முடிவெடுக்கும் பொறுப்பு - பிள்ளைகளைப் பற்றிய முக்கியமான முடிவுகளை எடுப்பது யார்
- பிள்ளைகள் எங்கே வாழ்வார்கள்
- பெற்றோருக்குரிய நேரம் – பிள்ளைகள் ஒவ்வொரு பெற்றோருடனும் எவ்வளவு நேரம் செலவிடுவார்கள்.
- சொத்து - தம்பதியருக்குச் சொந்தமான சொத்துக்கு என்ன நடக்கும்
- சிறுவருக்கான நிதியாதரவு (Child Support) – ஒரு பெற்றோர் மற்றப் பெற்றொருக்குக் கொடுக்கும் சிறுவருக்கான நிதியாதரவுத் தொகை எவ்வளவு

• வாழ்க்கைத் துணைவருக்கான நிதியாதரவு (Spousal Support) – வாழ்க்கைத் துணைவருக்கான நிதியாதரவு கொடுப்பது யார் மற்றும் அதன் தொகை எவ்வளவு

## ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வது எப்படி:

- **முறைசாரா ரீதியில் (Informally)** – இரு தரப்பினரும் தனிப்பட்டமுறையில் பிரச்சனைகளை எழுதாமல் உடன்படக்கூடும். ஒப்பந்தத்தின் ஆதாரம் இல்லாததால் இம்முறை பரிந்துரைக்கப்படுவதில்லை.
- **எழுத்துப்பூர்வமாக (In writing)** – விதிமுறைகள் யாவும் எழுதப்பட்டு இரு தரப்பினரும் அந்த ஒப்பந்ததில் கையெழுத்திடுவார்கள். இதற்கு ஒரு சாட்சி இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகின்றது. எந்தவொரு ஒப்பந்தத்திலும் கையெழுத்திடும் முன்னர் சட்ட ஆலோசனையைப் பெறுவதும் முக்கியம். இந்த ஒப்பந்தம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படலாம், இதனால் நீதிமன்றம் அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

நீங்கள் ஒரு பிரிவினை ஒப்பந்தம் செய்வதற்கு முன்னர் அனைத்துச் சிக்கல்களிலும் உடன்பட வேண்டியதில்லை. நீங்கள் சில விடயங்களில் உடன்படலாம் மற்றும் ஏனையவற்றைப் பிற்காலத்தில் முடிவு செய்யலாம். இரு தரப்பினரும் ஒப்புக் கொள்ளும்வரை நீங்கள் எந்த நேரத்திலும் ஒரு புதிய பிரிவினை ஒப்பந்தத்தை உருவாக்க முடியும்.

## உதாரணம்:

Mohammad மற்றும் Fatima ஆகிய இருவரும் பிரிந்துவிடத் தீர்மானிக்கின்றனர். அவர்கள் பின்வருவனவற்றுக்கு மட்டுமே உடன்படுகின்றனர்:

SALCO
South Asian Legal Clinic of Ontario

- Mohammad மற்றும் Fatima பிள்ளைகளுக்கான முடிவெடுக்கும் பொறுப்பைப் பகிர்ந்து கொள்வார்கள்
- பிள்ளைகள் திங்கள் முதல் வெள்ளி வரை பாத்திமாவுடனும் வார இறுதி நாட்களை முகமதுவுடனும்  கழிப்பார்கள்
- அவர்கள் தமக்குச் சொந்தமான வீட்டை விற்று இலாபத்தைப் பிரித்துக் கொள்வார்கள்

இந்த உதாரணத்தில், Mohammad மற்றும் Fatima ஆகிய இருவரும், முடிவெடுக்கும் பொறுப்பு, பெற்றோருக்குரிய நேரம் மற்றும் சொத்துப் பிரிவு ஆகிய விடயங்களில் உடன்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் பிரிவினை ஒப்பந்தத்தில் விதிமுறைகளை எழுதிப், பிற்காலத்தில் சிறுவருக்கான நிதியாதரவு மற்றும் வாழ்க்கைத் துணைவருக்கான நிதியாதரவு ஆகிய பிரச்சினைகளில் உடன்படுவார்கள்.

**பின்வருவன சம்பந்தப்பட்டிருந்தால்,  நீங்கள் பிரிவினை ஒப்பந்தம் செய்துகொள்ளக் கூடாது:**

- உங்கள் துணைவர் துன்புறுத்துபவராக இருக்கிறார் அல்லது கடந்த காலத்தில் துன்புறுத்துபவராக நடந்து கொண்டிருந்தார்
- உங்கள் துணைவருக்கு மனநலப் பிரச்சினைகள் உள்ளன
- உங்கள் துணைவருடன் பேசுவதற்கு  நீங்கள் பயப்படுகின்றீர்கள்

எஞ்சியுள்ள எந்தவொரு பிரச்சினையிலும் இரு தரப்பினராலும் ஒரு உடன்பாட்டிற்கு வர முடியாவிட்டால், அவர்கள் நீதிமன்ற நடவடிக்கையை விரைவில் தொடங்க வேண்டும், இதனால் நீதிமன்றம் அவர்களுக்கான

பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும்.

**பிரிவினை ஒப்பந்தத்தின் பகுதிகளை மாற்றுதல்:**

**தம்பதிகளிடையே தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தால்:**

- அவர்கள் புதியதொரு ஒப்பந்தம் செய்து, பழைய ஒப்பந்தம் செல்லுபடியாகாது என்பதை ஏற்றுக்கொள்ளலாம்
- மாற்றங்களை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், அவர்கள் அதை நீதிமன்றத்திற்கு வெளியே மத்தியஸ்தம் போன்ற தகராறுத் தீர்வு முறை மூலம் தீர்க்க முயற்சி செய்யலாம் அல்லது அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லலாம் (அவர்கள் நீதிமன்றத்தில் அந்த ஒப்பந்தத்தைத் தாக்கல் செய்திருந்தால்)

**தம்பதியினர் நீதிமன்ற உத்தரவைப் பெற்றிருந்தால்:**

- அவர்கள் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், முந்தைய உத்தரவை “மாற்றியமைக்குமாறு” (மாற்றும்படி) நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
- கடைசி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அவர்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்
- அவர்கள் அந்த மாற்றங்களுக்கு ஒப்புக்கொண்டால், புதிய ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, அதை உத்தரவில் எனப்படும் "ஒப்புதல் உத்தரவு" வைக்குமாறு நீதிமன்றத்திடம் கேட்டுக்கொள்ளலாம்.